நீர்-வடிகால் வாரிய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்ததால், அந்த விரோதத்தின் காரணமாக, அந்தக் குழாய்கள் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதே, அதுபற்றி அரசு ஆராய்ந்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்திருக்கிற தகவலின்படி 71 குழாய்கள் தற்காலிகமாகத்தான் பொருத்தப்பட்டன. உறுப்பினர் சொன்னமாதிரி அஜிடேஷன் பிரஷருக்காகத் தற்காலிகமாகக் குழாய்களை வைத்திருக்கலாம். பிறகு, தீர ஆலோசித்து பயன் உள்ள தண்ணீரை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் 31 குழாய்கள் போதும் என்று அதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் நான் மறுபரிசிலனை செய்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டுப் பணம் திரட்டுவதற்கான அரசின் அனுமதி.

* வினா எண் 375—திரு. பெ. சு. திருவேங்கடம் . மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் கடன் பத்திரம் வெளியிட்டு அதன் மூலம் கடன் திரட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(அ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) தொகை எதற்கு செலவழிக்க உத்தேசம் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியம் பொதுச் சந்தையில் (open market) கடன் வாங்கவும் அதற்கான பத்திரங்கள் வழங்கவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) நடப்பு ஆண்டில், அதாவது 1981-82-ல், தமிழக அரசு தனது ஆணை எண் 1862, ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 9-11-81 ல் இவ்வாரியம் பொதுச் சந்தையில் கடன் எழுப்பிய ரூபாய் 110.00 இலட்சங்களுக்கு உத்திரவாதம் அளித்துள்ளது.

(இ) இவ்வாறு பொதுச் சந்தையில் எழுப்பிய கடன் தொகையை இவ்வாரியம் நீர் வழங்கல், கழிவு நீரகற்றல் ஆகியவற்றின் முதலீட்டுப் பணிக்காக செலவழிக்க உத்தேசம் செய்துள்ளது.